28th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு எம்மாதிரி ஏற்பாடு செய்து வசூலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அரசாங்கம் அனுமதி அளிக்கும் அல்லது அனுமதி மறுக்கும். கட்டாயப்படுத்தி வசூல் செய்வதாகப் புகார் சொல்வதற்கு இடமளிக்கக் கூடாதென்பதில் தொடர்ந்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது. அப்படிக் கவனித்து வந்த போதிலும் இந்தக் கேள்வியில் வந்த புகார்போல் ஆதாரமற்ற புகார்களே வந்துகொண்டிருக்கின்றன.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், சீன ஆக்கிரமிப்பு ஏற்பட்ட உடனேயே ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும், முக்கியஸ்தர்களும் சேர்ந்து மிக அதிகமான தொகையை வசூலித்துக் கொண்டு வந்தார்கள். இப்போது தாசில்தாரோ, அல்லது கலெக்டரோ வந்தால்தான் வசூலிக்கப்படுகிறது என்ற ஏற்பாடு இருப்பதால் வசூல் குறைந்திருப்பது உண்மையா? அப்படியானால் ஆங்காங்குள்ள மக்கள் பிரதிநிதிகளைக்கொண்ட சிறிய சிறிய கமிட்டிகள் அமைத்து நிதி வசூலிக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் கூறுவது எனக்குப் புரியவில்லை. எப்போதும் உள்ள கொள்கைதான் இப்போதும் அனுசரிக்கப்பட்டு வருகிறது. மக்களுக்கு அளவு கடந்த, அற்புதமான உற்சாகம், உணர்ச்சி இருக்கிறது. நாட்டின் பாதுகாப்பிற்கு அவர்களுடைய காணிக்கையைச் செலுத்த வேண்டுமென்று ஆங்காங்கு மக்கள் முன்வருகிறார்கள். இதிலே அதிகாரிகள் பங்கு எல்லாம், அவ்வாறு தொகை வசூலிக்கப்பட்டால் அதைக் கண்காணித்து, சரியாகக் கணக்கெடுத்து, சேர்க்கவேண்டிய இடத்தில் சேர்க்கவேண்டுமென்பதுதான்.

போலீஸ்காரர்களுக்கு வீடு கட்டுதல் (சென்னை)

* 400 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் :** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை மாநகருக்குள் போலீசாருக்கென்று 1962-ல் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை? அதற்கு ஆன செலவென்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னை மாநகரில் போலீசாருக்காக கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்ட 492 வீடுகளில், 377 வீடுகள் 1962-ல் கட்டப்பட்டன. இதற்காக 1962-ல் 14,93,015 ரூபாய் செலவிடப்பட்டது.

அணை கட்டுதல் (தாணிபாடி பிர்க்கா)

* 401 **கேள்வி.—திரு. ஏ. ஆறுமுகம் :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கம் தாலுகா, தாணிபாடி பிர்க்கா, போந்தை கிராமத்தில் தீப்பந்தான் அணை கட்டும் வேலை எந்த நிலையில் உள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டம் ரெவின்யூ போர்டு உணவு உற்பத்தித் துறையின் ஆலோசனையில் இருக்கிறது.

[28th March 1963

The proposal is under the consideration of the Board of Revenue (Food Production).

திரு. எ. ஆறுமுகம் : ஸார், இந்த வேலை எப்போது துவக்கப் படும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதைத் தெரிந்து கொள்ளலாமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இந்தத் திட்டத்திற்காக 95,000 ரூபாய் எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள். இதுபற்றி கலெக்டர் அபிப் பிராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அபிப் பிராயம் தெரிந்தவுடன் இந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

தரிசு நிலங்கள் (வடாற்காடு மாவட்டம்)

*** 402 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் பயிரிடத்தக்க தரிசு நிலம் எத்தனை ஏக்கர் உளது ?

(இ) கடந்த நிதியாண்டுக் காலத்தில், தரிசு நிலத்தைப் பட்டா செய்து கொடுக்கவேண்டி வந்த விண்ணப்பங்கள் எத்தனை ?

(உ) அவற்றுள் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை ?

(எ) அவ்வகையில் பட்டா நிலமாக மாறிய நிலம் எத்தனை ஏக்கர் ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) 1—4—1961-ல் எடுத்த கணக் குப்படி வட ஆற்காடு மாவட்டத்தில் பயிரிடத்தக்க தரிசு நிலத் தின் மொத்தப் பரப்பு 72,972 ஏகர் 3 செண்ட்.

(இ) 12,850 விண்ணப்பங்கள் வந்தன.

(உ) 4,893 விண்ணப்பதாரர்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(எ) மொத்தம் 9,942 ஏக்கர் 75 செண்ட் நிலம் பட்டா செய்து கொடுக்கப்பட்டது.

புலவர் கா. கோவிந்தன் : ஸார், 12,850 விண்ணப்பங்கள் வந்தும், 4,893 விண்ணப்பங்கள்தான் அனுமதிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். மற்ற விண்ணப்பங்கள் நிலைமை என்ன என்பதைத் தெரிந்துகொள்ளலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : விண்ணப்பம் போட்டவர்களில் எத்தனையோ பேர் நிலம் பெறுவதற்குத் தகுதி இல்லாதவர்களாக இருந்திருக்கலாம். அவர்களுக்கெல்லாம் நிலம் கொடுக்கவேண்டு மென்ற கட்டாயம் கிடையாது விண்ணப்பம் போட்டவர்களில் நிலம் பெறக்கூடிய தகுதி உள்ளவர்கள் 4,893 பேர்கள். அவர் களுக்கு நிலம் கொடுத்திருக்கிறார்கள்.